

அரியலூர் மாவட்டம் செந்துறை ஒன்றியம் அங்கனூர் தமது சொந்த கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் எழுச்சி தமிழர் தொல்.திருமாவளவன் வாக்களித்தார்.



காங்கேயம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முத்தூர் நடுநிலைப்பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.


தமிழக சட்டமன்ற திருவெறும்பூர் தொகுதியில் மூன்றாவது முறையாக போட்டியிடும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தனது வாக்கைச் செலுத்துவதற்காக, திருச்சி வரகனேரியில் உள்ள டி.எஸ்.எம். (TSM) மேல்நிலைப்பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில், தனது மனைவி ஜனனியுடன் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்ற தயாரகவுள்ளனர்.


அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் தேவனூர் தமது சொந்த கிராமத்தில் 2026 சட்டமன்றத் தேர்தலை யொட்டி, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமது குடும்பத்தினருடன் தேவனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் வாக்களித்தார்.


ஆலங்குடி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மரமடக்கி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் தனது வாக்கை பதிவு செய்தார் .


நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ராசிபுரம் நகரம் தேசிய அரசு பெண்கள் பள்ளியில் வாக்குச்சாவடி எண் 150 ல் வாக்களித்தார்.


சேலம் வடக்கு சட்டமன்ற கழக வேட்பாளர். மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன். சி எஸ்.ஐ பாலிடெக்னிக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்கு சாவடியில் வாக்களித்தார்.


விராலிமலை சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் கே.கே.செல்லப்பாண்டியன் கீரனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் தனது வாக்கை பதிவு செய்தார்.


நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும்,, மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி வெண்ணந்தூர் ஒன்றியம் கட்டனாச்சம்பட்டி அரசு பள்ளியில் வாக்குச்சாவடி எண் 87 ல் வாக்களித்தார்

## அத்துமீறும் தேர்தல் ஆணையம்:

# அதிகாரிகளை மாற்றலாம் - வாக்காளர்களை மாற்ற முடியுமா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேள்வி!



சென்னை, ஏப். 23-

அதிகாரிகளை மாற்றலாம் - வாக்காளர்களை மாற்ற முடியுமா? என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் கேள்வி யெழுப்பி அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெறும் அய்ந்து மாநிலங்களில் தமிழ்நாடு, மேற்கு வங்கம் ஆகிய இரு மாநிலங்கள் மீது ஒன்றிய ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. அரசு குறிவைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நடுநிலைமைக்குப் ‘பேர் போன’ தேர்தல் ஆணையமோ, இந்த இரு மாநிலங்களில் மட்டும் தொடர்ந்து அதிகாரிகளை மாற்றிக் கொண்டே இருக்கிறது. முதலில் மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர் என்று தொடங்கி, டி.அய்.ஜி, ஏ.டி.ஜி.பி, என்று வரிசையாக மேலேறி, டி.ஜி.பி., உள்துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர் என்று மாற்றிக் கொண்டே இருந்தார்கள். இதில் தி.மு.க. சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப் பட்ட பா.ஜ.க.வுக்குச் சார்பான காவல்துறை அதிகாரியின் நியமனம் திரும்பப் பெறப் பட்டது.

இந்த இந்த அதிகாரிகளை மாற்ற வேண்டும் என்று எங்கிருந்தெல்லாம் ஆணை வருகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான்! பார்ப்பன ‘இனமலர்’ பத்திரிகையொன்று ஒரு காவல் துறை அதிகாரியை மாற்றவில்லையே என்று எழுதுகிறது மறுநாளே அவர் மாற்றப்படுகிறார்.

முதலமைச்சரின் தனிச் செயலர் உமாநாத் அய்.ஏ.எஸ். போன்ற துடிப்புமிக்கவர்கள் மீது தேர்தல் விதிமீறல் என்று குற்றம் சாட்டினார்கள். அவ்வழக்கு இன்று (22.4.2026) உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

### அதிகார அத்துமீறல் இல்லையா?

தலைமைச் செயலாளரை மாற்றுவதற்கெல்லாம் அதிகாரமே இல்லாத தேர்தல் ஆணையம், அதிகாரிகளை மாற்றுவதை நிறுத்தவில்லை. இது அதிகார அத்துமீறல் இல்லையா?

நாம் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டங்களில் குறிப்பிட்டதை இங்கும் நினைவுகூர விரும்புகிறோம்.

தேர்தல் ஆணையம் அதிகாரிகளை மாற்றலாம். வாக்காளர்களை மாற்ற முடியுமா? குஜராத்திலிருந்தும், பீகாரிலிருந்தும் வாக்காளர்களைக் கொண்டு வந்து இறக்குவார்களா?

### அரசு இயந்திரத்தை இன்னலுக்கு உள்ளாக்குவோர் யார்?

அதிகார வரம்புகளை மீறுவோர் யார்? அரசு இயந்திரத்தை இன்னலுக்கு உள்ளாக்குவோர் யார்? என்பதையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

அனைத்துக்கும் சேர்த்துத் தான் தீர்ப்பளிப்பார்கள், காத்திருப்போம்!


பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் அருண் நேரு அவர்கள் கான கிளியநல்லூரில் உள்ள வாக்கு பதிவு மையத்தில் தனது வாக்கை பதிவு செய்தார்



சென்னை சிந்தனையாளர் மன்றம் சார்பில், “தொகுதி மறுவரையறை பெரிய வெற்றி தமிழ்நாட்டுக்கு’! பெருந்தோல்வி ஒன்றிய அரசுக்கு! ஏன்? எப்படி?” எனும் தலைப்பில் நடைபெற்ற மாபெரும் கருத்தரங்கத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தி இந்து குழுமம் இயக்குநர் ‘இந்து’ என்.ராம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் முத்தமிழ்ப் பேரவை குணாநிதி அமிர்தம் வரவேற்றார். சென்னை சிந்தனையாளர் மன்ற ஒருங்கிணைப்பாளர் விஜயா தாயன்பன் தலைமை வகித்தார்.